[10th November 1961

அவருடைய திட்டம் என்ன? கவிரியையும் கொள்ளிடத்தையும் ஆழப்படுத்தி உயர்ந்த கரை அமைக்க ஏதாவது திட்டமிடப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN : தஞ்சாவூர் டெல்டாப் பகுதியைப் பற்றிக் கேட்டதால் இந்தப் பதில் அளிக்கப்பட்டது. காவிரிக் கரையைப் பலப்படுத்த ஒரு சூப்பரின்டெண்டிங் எஞ்சினியரை நியமித்து மற்றும் வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது.

Flood banks (the Vaigai)

* 1963 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. RAMACHANDRAN) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any scheme for providing flood banks for villages situated on the banks of the Vaigai river in Paramakudi taluk in Ramanathapuram district has been sanctioned;

(*b*) if so, the details thereof; and

(*c*) when the work will be taken up?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir. Certain schemes are under investigation.

(*b*) & (*c*) Do not arise.

SRIMATHI A. S. PONNAMMAL : கனம் தலைவர் அவர்களே, இந்த வைகையில் வெள்ளம் வருவது ராமநாதபுரத்தில் மட்டுமல்ல என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இது போன்று வெள்ளம் வரக்கூடிய எல்லாப் பகுதிகளிலும் இந்த மாதிரித் தடுப்பு முறையைச் செய்ய அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI P. KAKKAN : இதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. எங்கெங்கு இந்த வெள்ளத் தடுப்பு முறையை மேற்கொள்ள வேண்டுமோ அங்கெல்லாம் அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளும்.

Hunger-strike (students of M. C. Rajah Harijan Hostel)

* 1964 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் சென்னையிலுள்ள எம். சி. ராஜா ஹரிஜன ஹாஸ்டலில் மாணவர்கள் என்ன குறைகளுக்காக உண்ணு நோன்பு அனுசரித்தனர் என்று அரசினருக்குத் தெரியுமா?

(இ) அவர்களுடைய குறைகளை நீக்க அரசினர் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை?

10th November 1961]

THE HON. SRI P. KAKKAN : (அ) & (ஆ) The students had no justification to go on hunger-strike. The Government subsequently came to know of the so-called grievances and no action is proposed to be taken on them.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஏற்கனவே அங்கு கொடுத்து வந்த சாப்பாட்டின் அளவும் தரமும் குறைந்த காரணத்தினுல்தான் இதுபோன்ற உண்ணுவிரதப் போராட்டத்திற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இல்லையென்று சொல்வதாக இருந்தாலும் மீண்டும் விசாரணை செய்து பரிசீலனை செய்ய சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN : உண்ணுவிரதம் ஆரம்பித்ததற்குக் காரணம் அதுவல்ல. அவர்கள் 13 கோரிக்கைகள்—வாழை இலையில் சோறு போடவேண்டும். தேனும்பேட்டை சொசைடி பாலுக்குப் பதிலாக அய்னவரம் பால் வேண்டும், அங்கு சமையல் செய்பவர்களுக்கு யூனிபாரம் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகள் போட்டு சுதந்திர தினத்தன்று, உண்ணுவிரதம் ஆரம்பித்தார்கள். இந்தக் கோரிக்கைகளைச் சிலர் தூண்டுதலினுல் அந்த மாணவர்கள் கேட்டார்கள். இவைகளையெல்லாம் நாம் இப்போது ஏற்றுக்கொண்டு பணிந்து போனுல் பின்னர் ஹாஸ்டலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

SRI A. A. RASHEED : இந்த உண்ணுவிரதம் எத்தனை மணி நேரம் நடந்தது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : ஒரு நாள் அல்லது இரண்டு நாள் நடந்தது என்று நினைக்கிறேன். அவர்கள் பின்னர் தவறை உணர்ந்து நிறுத்திக்கொண்டார்கள்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்கள் உண்ணுவிரதம் இருப்பதைத் தடுக்க சர்க்கார் ஏதாவது வழிவகை செய்யுமா?

THE HON. SRI P. KAKKAN : எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்த பிறகு கடைப்பிடிக்க வேண்டியது உண்ணுவிரதம் என்பது மகாத்மா காந்தி நமக்களித்த சிறந்த போதனை. ஆனுல் இன்று சிலருடைய தூண்டுதலுக்காகவோ, வம்புக்கோ, சில கட்சிகளின் வளர்ச்சியை முன்னிட்டோ உண்ணுவிரதம் இருக்கிறுர்கள்.

SRIMATHI A. S. PONNAMMAL : இந்த உண்ணுவிரதம் இருப்பதற்குக் காரணம் சில ஆசிரியர்கள், ஒருசில குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள், மாணவர்களைத் தூண்டி விடுவது என்பதால் அப்பேர்ப்பட்டவர்கள் வருவதை தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்?

THE HON. SRI P. KAKKAN : ஹாஸ்டல்களுக்குப் பலபேர் வருகிறுர்கள். பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறுர்கள். முதலில் வரும்போது இவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்பதைக்

கண்டு பிடிக்க முடியாது. இந்த மாதிரி ஏதாவது தெரிந்த பிறகு தான் அப்பேர்ப்பட்டவர்களைத் தடுக்க முடியும்.

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட மாணவர்களுடைய விடுதியில், பல ஊழல்கள் நடப்பதும், பல தவறுகள் நடப்பதும், போடுகிற சோற்றில் வஞ்சகம் செய்வது மான நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதன் காரணமாகத்தான் இம்மாதிரி யான உண்ணாவிரதம் ஏற்படுகின்றது. ஆகவே, இவைகளை போக்கு வதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்களா?

THE HON. SRI P. KAKKAN : இம்மாதிரி ஏதேனும் குறைகள் இருந்தால், டயரக்டர் அவர்களிடத்தில் சொல்லலாம். நான் இந்த ஊரில்தான் இருக்கிறேன். என்னிடம் நேரில் வந்து சொன்னால் அவைகளை கவனிப்பதற்கு நான் தயாராய் இருக்கிறேன். இவ் விதம் சொல்லி இவைகளை நிவர்த்தி செய்து கொள்வதுதான் நல்லது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI P. G. MANICKAM : ஹாஸ்டலில் மாணவர்கள் ஏன் இப்படி செய்தார்கள் என்பதை விசாரித்து, இம்மாதிரி மற்ற ஆஸ்டல்களிலும் நடக்காதவாறு பார்த்துக்கொள்ள தக்க நட வடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதை நன்றாக விசாரித்துப் பார்த்ததில் ஒன்றிரண்டு மாணவர்கள்தான் இதற்குக் காரணமாய் இருந்திருக்கிறார்கள். அதில் ஒரு மாணவரின் மீது நடவடிக்கை எடுத்து, அவர் ஆஸ்டலில் தங்கியிருப்பது நல்லதல்ல என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

House-sites for Harijans (North Arcot district)

* 1965 *Q.*—SRI P. S. SANTHANAM : கனம் பொது மரா மத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவண்ணாமலை, செங்கம் தாலுகாக்களில் எத்தனை கிராமங்களில் ஹரிஜனங் களுக்கு வீட்டு மனைக்காக நிலம் வாங்கி தரப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : The number of villages in which the Harijans had been provided with house-sites, was six in Tiruvannamalai taluk and 11 in Chengam taluk during 1960–61.

SRI P. G. MANICKAM : தலைவர் அவர்களே, திருவண்ணா மலையில், மலைபாம்பாடி கிராமத்திலுள்ளவர்கள் வீட்டு மனைகளுக் காக பணம் அடைத்து ஒன்றரை ஆண்டு காலமாகியும் இதுவரை அளந்து கொடுக்கப்படாததின் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனியாக கேள்வி போட வேண்டும்.